



# சமூக நலன்
# மற்றும்
# மகளிர் உரிமைத் துறை

## மானியக் கோரிக்கை எண் - 45

# அறிவிப்புகள்
# 2023 - 2024

# சமூக நலன்
# மற்றும்
# மகளிர் உரிமைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 45

## அறிவிப்புகள்
## 2023 - 2024


**திருமதி பி. கீதா ஜீவன்**

சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்

## 1. 25.70 கோடி ரூபாய் செலவினத்தில் 17,312 அரசுப் பள்ளி சத்துணவு மையங்களுக்கு புதிய சமையல் உபகரணங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 43,094 சத்துணவு மையங்களில், சமையல் உபகரணங்கள் பழுதடைந்த நிலையில் உள்ள 17,312 பள்ளி சத்துணவு மையங்களுக்கு 25.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமையல் உபகரணங்கள் வழங்கப்படும்.

2. சமூக நலத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் சத்துணவுத் திட்டம், உள்ளகப் புகார்க் குழுக்கள், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் ஆகியவற்றின் செயல்பாடுகளை துரிதப்படுத்தவும், கண்காணிக்கவும் 50 இலட்சம் ரூபாய் செலவினத்தில் இணையதள முகப்பு மற்றும் கைப்பேசி செயலிகள் உருவாக்கப்படும்.

சமூக நலத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் சத்துணவுத் திட்டம் (15.00 இலட்சம் ரூபாய்), உள்ளகப் புகார்க் குழு அமைத்தல் (15.00 இலட்சம் ரூபாய்), கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் (20.00 இலட்சம் ரூபாய்) ஆகியவை குறித்த தொழில்நுட்ப தகவல் பரிமாற்ற தரவுகள் சேகரித்தல், நிகழ்நேர கண்காணிப்பு போன்றவற்றிற்கு 50 இலட்சம் ரூபாய் செலவினத்தில் இணையதள முகப்பு மற்றும் கைப்பேசி செயலிகள் உருவாக்கப்படும்.

## 3. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் நவீன உயர்ரக தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போதைய காலக்கட்டத்தில் உள்ள தொழில்நுட்பத்திற்கேற்ப நவீன ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஆரி வேலை மற்றும் எம்பிராய்டரி போன்றவற்றில் மக்களிடையே ஆர்வம் மிகுந்து காணப்படுவதாலும், சந்தைகளில் அதற்கான தேவையும், வேலைவாய்ப்பும் உள்ளதாலும் நவீன தையல் பயிற்சி பெற்ற பயனாளிகள் அப்பணிகளுக்காக வெளிச் சந்தைகளை அணுகாமல், தாமாகவே துரிதமாக அப்பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக நவீன உயர்ரக தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

## 4 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மறுசீரமைக்கப்படும்.

பெண் குழந்தைகளின் பிறப்பை வரவேற்கவும், கல்வியில் பாலின வேறுபாட்டை களைந்து பெண் குழந்தைகள் கல்வி பெறுவதை ஊக்கப்படுத்தவும், சிறுகுடும்பமாக வாழும் பெற்றோரை ஆதரிக்கவும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. திட்டம் துவங்கப்பட்டு 30 ஆண்டுகளை கடந்த நிலையில், தற்போதைய சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப, திட்டத்தில் இருக்கும் நடைமுறை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள சில தகுதிகளை தளர்த்தினால் அதிகமான பயனாளிகள் பயனடைவர். எனவே, இத்திட்டத்தில், பயனாளிகள் குறித்து இணையதளத்தில் தரவு சேகரித்தல், வருமான வரம்பை உயர்த்துதல், காப்பீட்டுத் திட்டத்தை உள்ளடக்குதல், அரசு இல்லக் குழந்தைகளை திட்டத்துடன் இணைத்தல் போன்ற சில மாற்றங்களைக் கொணர்ந்து கூடுதல் எண்ணிக்கையில் பெண் குழந்தைகள் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மறுசீரமைக்கப்படும்.

5. ஆறுவயதிற்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சியினை கண்காணித்து நிகழ்நேர பதிவு மேற்கொள்ள ஏதுவாக 18,573 அங்கன்வாடி பணியாளர்களுக்கு 17.53 கோடி ரூபாய் செலவினத்தில் திறன் கைப்பேசிகள் வழங்கப்படும்.

குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலையினை, தொழில்நுட்பம் மூலம் நிகழ்நேர கண்காணிப்பினை மேற்கொள்வதற்காக, பழுதடைந்த 18,573 கைப்பேசிகளுக்கு மாற்றாக தலா 9,440 ரூபாய் மதிப்பில், புதிய திறன் கைப்பேசிகள் 17.53 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

**6. குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் வகையில் 18,573 குழந்தைகள் மையங்களுக்கு 14.85 கோடி ரூபாய் செலவினத்தில் வளர்ச்சிக் கண்காணிப்புக் கருவிகள் வழங்கப்படும்.**

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் எடை மற்றும் உயரத்தினை கண்காணித்து அவர்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு மையத்திற்கும் நான்கு வகையிலான வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் 8,000 ரூபாய் மதிப்பில் 18,573 குழந்தைகள் மையங்களுக்கு 14.85 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

7. முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 700 குழந்தைகள் மையங்களுக்கு கற்றல் திறன்களை ஊக்கப்படுத்துவதற்கு எல்.இ.டி தொலைகாட்சிப் பெட்டிகள் ஒரு மையத்திற்கு 25,000 ரூபாய் வீதம் 1.75 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 700 குழந்தைகள் மையங்களில் முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக கற்றல் திறன்களை ஊக்கப்படுத்துவதற்கு எல்.இ.டி தொலைகாட்சிப் பெட்டிகள் ஒரு மையத்திற்கு 25,000 ரூபாய் வீதம் 1.75 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

8. **நீலகிரி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டாரத்தில் உள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 9,088 குழந்தைகளுக்கு ஸ்வெட்டர், தொப்பி, காலுறை வழங்குவதோடு 608 மையங்களுக்கு தரைவிரிப்பான்கள் 80 இலட்சம் ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.**

குளிர்பிரதேசங்களில் அமைந்துள்ள குழந்தைகள் மையங்களில் ஏதுவான சூழலை அமைத்து தருவதன் மூலம் முன்பருவக் கல்வி கற்க வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டாரத்தில் அமைந்துள்ள 122 குழந்தைகள் மையங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 486 மையங்கள் என மொத்தம் 608 குழந்தைகள் மையங்களுக்கு வருகை புரியும் சுமார் 9,088 குழந்தைகளுக்கு தலா 550 ரூபாய் வீதம் இரண்டு ஸ்வெட்டர், இரண்டு தொப்பி, இரண்டு ஜோடி காலுறைகளும் மற்றும் 608 குழந்தைகள் மையங்களுக்கு 5,000 ரூபாய் வீதம் தரைவிரிப்பான்கள் ஆக மொத்தம் 80 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

9. குழந்தைகள் மையங்களில் சமையலுக்கு தேவைப்படும் மளிகை பொருட்கள் மற்றும் எரிவாயு உருளைகள் அரசு மற்றும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படும்.

குழந்தைகள் மையங்களில் சமையலுக்கு தேவைப்படும் தாளிதப் பொருட்கள் மற்றும் எரிவாயு உருளைகளை தற்போது அங்கன்வாடி பணியாளர்களே வாங்கி வந்து சமையல் செய்வதால் அப்பணியாளர்களின் பெரும்பாலான நேரம் அதற்காக மட்டுமே செலவிடப்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, ஒரே விலையில் தரமான மளிகை பொருட்கள் மற்றும் எரிவாயு உருளைகள் அரசு மற்றும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படும். இதனால் அங்கன்வாடி பணியாளர்களின் பணிச்சுமை வெகுவாக குறைக்கப்பட்டு திட்ட செயலாக்கத்தில் முழு கவனத்தை செலுத்தி ஊட்டச்சத்து குறைபாடில்லா தமிழ்நாட்டை உருவாக்கும் இலக்கை உறுதி செய்திடலாம்.

**10. சத்துணவு திட்டத்தில் பயனடைந்து வரும் குழந்தைகளுக்கு, டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த நாளன்று இனிப்பு பொங்கல் வழங்கப்படும்.**

சத்துணவு திட்டத்தில் பயனடைந்து வரும் குழந்தைகளுக்கு, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சி தலைவி செல்வி ஜெ.ஜெயலலிதா ஆகியோரின் பிறந்த நாளன்று இனிப்பு பொங்கல் வழங்கப்படுவதுபோல் இனி வரும் காலங்களில் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த நாளன்றும் இனிப்பு பொங்கல் வழங்கப்படும்.

**11. பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் குறித்த தரவுகளை சேமிக்கும் இணையதளம் நிறுவுதல், நிகழ்நேர கைப்பேசி செயலி மூலம் ஆய்வு மற்றும் கண்காணிப்பு, ஒரு கோடி ரூபாய் செலவினத்தில் மேற்கொள்ளப்படும்.**

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ன்படி குழந்தைகளுக்கு வழங்கப்படும் நிறுவனம் மற்றும் நிறுவனம் சாரா பராமரிப்பு சேவைகளை திறம்பட கையாளவும், காவல்துறை, தொழிலாளர் நலத்துறை, கல்வித் துறை போன்ற பிற துறைகளின் பங்களிப்பினை உறுதி செய்யவும், இக்கட்டான சூழலில் உள்ள குழந்தைகளை இனங்கண்டு அவர்களுக்கான பின்தொடர் சேவைகளை மேற்கொள்ளவும் தரவுகளை சேகரித்து, சேமிக்கும் இணையதளம் மற்றும் இத்தரவுகளை ஆய்வு செய்து கண்காணிக்க உதவும் நிகழ்நேர கைப்பேசி செயலி ஆகியவை ஒரு கோடி ரூபாய் செலவினத்தில் உருவாக்கப்படும்.

**12. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், மகளிர் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு நிபுணர்கள் / சேவை வழங்குநர்கள் வாயிலாக மன ரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு உரிய பயிற்சிகள், தேவையின் அடிப்படையில் ஒரு கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.**

சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், குழந்தை திருமணம், ஆட்கடத்தல் மூலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் மகளிர் காப்பகங்களில் தங்க வைக்கப்படும் பெண்கள் ஆகியோரின் எதிர்மறை எண்ணங்களை மாற்றி மனதிற்கு உகந்த சூழலை உருவாக்கி அவர்களது தனிநபர் ஆர்வத்தின் அடிப்படையில் அவர்களுக்கு மன ரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு கலை, இசை, நாடகம், யோகா, தியானம் தோட்டக்கலை போன்ற சிறப்புப் பயிற்சிகள், தேவையின் அடிப்படையில் நிபுணர்கள் / சேவை வழங்குநர்கள் வாயிலாக ஒரு கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

13. பாலியல் குற்றங்கள் அல்லாத பிற துன்புறுத்தல்கள் மற்றும் சுரண்டலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு 50 இலட்சம் ரூபாய்க்கு நிதித் தொகுப்பு உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் பாலியல் குற்றங்கள் அல்லாத பிற துன்புறுத்தல்கள், தற்காலிக அல்லது நிரந்தர இழப்பினால் பாதிப்பிற்குள்ளாகும் குழந்தைகள், ஆட்கடத்தல், பேரிடர் காரணமான விபத்துகளால் நேரடியாக மற்றும் மறைமுகமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உடனடி நிவாரண உதவி வழங்கும் வகையில் 50 இலட்சம் ரூபாய்க்கு ஒரு நிதித் தொகுப்பு உருவாக்கப்படும்.

**14. சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் 34 அரசு குழந்தைகள் இல்லங்களிலும் திறன் பலகைகள் (ஸ்மார்ட் போர்ட்) 55 இலட்சம் ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.**

சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் 34 குழந்தைகள் இல்லங்களில் தங்கி கல்வி பயிலும் மாணவ / மாணவிகளின் கற்கும் ஆர்வத்தை வளர்க்கவும், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கற்கும் முறைகளை ஊக்கப்படுத்தவும், தேர்ச்சி சதவீதத்தை உயர்த்தவும், மேம்பட்ட கற்றல் அனுபவத்தை வழங்கக்கூடிய திறன் பலகைகள் (ஸ்மார்ட் போர்ட்) 55 இலட்சம் ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

**15. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் குழந்தைகளுக்கான போதை தடுப்பு மையங்கள் 1.14 கோடி ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.**

பள்ளி இடைநிறுத்தம், குற்ற செயல்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடுதல், சமூகத்திற்கு தீங்கு விளைவித்தல் போன்ற செயல்பாடுகளுக்கு, 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மது மற்றும் போதை பழக்கங்களே முக்கிய காரணமாக அமைகிறது. எனவே, மது மற்றும் போதை பொருட்களுக்கு அடிமையான குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்கும் வகையில் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் குழந்தைகளுக்கான போதை தடுப்பு மையங்கள் 1.14 கோடி ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.

16. தூத்துக்குடி மாவட்டம் தட்டப்பாறை அரசு குழந்தைகள் இல்லம், மற்றும் சென்னை மாவட்டம், இராயபுரம் சிறுவருக்கான அரசு குழந்தைகள் இல்லம் ஆகியவற்றில் தலா 7 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறையில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லத்தில் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டடங்கள் இடித்து அகற்றப்பட்ட நிலையில், அவ்வில்ல மாணவர்களின் பயன்பாட்டிற்காக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்படும். அதேபோன்று சென்னை இராயபுரத்தில் உள்ள சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் உள்ள பழைய கட்டடங்கள் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு அவ்வில்ல மாணவர்களின் பயன்பாட்டிற்காக வகுப்பறை கட்டடங்களுடன் இணைந்த புதிய கட்டடங்கள் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

17. சென்னை, சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம், திருநெல்வேலி, சென்னை மற்றும் மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லங்களில், பணியாளர் குடியிருப்பு 10 கோடி ரூபாய் செலவினத்தில் கட்டப்படும்.

சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் அரசினர் குழந்தைகள் இல்லம் மற்றும் கூர்நோக்கு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆண்/பெண் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும் நிறுவனங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை உயர்த்திடவும் இல்ல வளாகத்தில் பணியாளர் குடியிருப்புகள் அமைவது அவசியமாகிறது. எனவே, சென்னை, சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் மற்றும் திருநெல்வேலி, சென்னை, மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் பணியாற்றும் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 10 கோடி ரூபாய் செலவினத்தில் கட்டப்படும்.

**திருமதி பி. கீதா ஜீவன்**

**சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.